**திருமங்கையாழ்வார் அருளிச் செய்த**
**பெரிய திருமொழி**
**ஒன்பதாம் பத்து**

**நான்காம் திருமொழி - காவார்**
**திருப்புல்லாணி 2**
**[பிரிவாற்றாத தலைவி பறவைகளைத் தூது விட்டும், பிறை தென்றல் முதலியவற்றால் வருந்தியும் கூறிய பாசுரம்]**

** காவார் மடல் பெண்ணை * அன்றில் அரி குரலும் *
ஏவாயின் ஊடு இயங்கும் * எஃகிற் கொடிதாலோ! **
பூவார் மணம் கமழும் * புல்லாணி கை தொழுதேன் *
பாவாய்! இது நமக்கோர் * பான்மையே ஆகாதே 1

முன்னம் குறள் உருவாய் * மூவடி மண் கொண்டளந்த *
மன்னன் சரிதைக்கே * மால் ஆகிப் பொன் பயந்தேன் **
பொன் அங்கழிக் கானல் * புள்ளினங்காள்! புல்லாணி *
அன்னமாய் நூல் பயந்தாற்கு * ஆங்கு இதனைச் செப்புமினே 2

வவ்வித் துழாய் அதன் மேல் * சென்ற தனி நெஞ்சம் *
செவ்வி அறியாது * நிற்குங்கொல்? நித்திலங்கள் **
பவ்வத் திரை உலவு * புல்லாணி கை தொழுதேன் *
தெய்வச் சிலையாற்கு * என் சிந்தை நோய் செப்புமினே 3

பரிய இரணியனது ஆகம் * அணி உகிரால் *
அரி உருவாய்க் கீண்டான் * அருள் தந்தவா! நமக்கு **
பொரு திரைகள் போந்துலவு * புல்லாணி கை தொழுதேன் *
அரி மலர்க் கண் நீர் ததும்ப * அந்துகிலும் நில்லாவே 4

** வில்லால் இலங்கை மலங்கச் * சரம் துரந்த *
வல்லாளன் பின் போன * நெஞ்சம் வரும் அளவும் **
எல்லாரும் என் தன்னை * ஏசிலும் பேசிடினும் *
புல்லாணி எம்பெருமான் * பொய் கேட்டு இருந்தேனே 5

சுழன்று இலங்கு வெங்கதிரோன் * தேரோடும் போய் மறைந்தான் *
அழன்று கொடிதாகி * அஞ்சுடரில் தான் அடுமால் **
செழுந்தடம் பூஞ்சோலை சூழ் * புல்லாணி கை தொழுதேன் *
இழந்திருந்தேன் என் தன் * எழில் நிறமும் சங்குமே 6

கனையார் இடிகுரலின் * கார்மணியின் நா ஆடல் *
தினையேனும் நில்லாது * தீயில் கொடிதாலோ **
புனையார் மணிமாடப் * புல்லாணி கை தொழுதேன் *
வினையேன் மேல் வேலையும் * வெந்தழலே வீசுமே 7

தூம்புடைக் கை வேழம் * வெருவ மருப்பு ஒசித்த *
பாம்பின் அணையான் * அருள் தந்தவா! நமக்கு **
பூஞ்செருந்தி பொன் சொரியும் * புல்லாணி கை தொழுதேன் *
தேம்பல் இளம்பிறையும் * என் தனக்கோர் வெந்தழலே 8

வேதமும் வேள்வியும் * விண்ணும் இருசுடரும் *
ஆதியும் ஆனான் * அருள் தந்தவா! நமக்கு **
போதலரும் புன்னை சூழ் * புல்லாணி கை தொழுதேன் *
ஓதமும் நானும் * உறங்காது இருந்தேனே 9

** பொன் அலரும் புன்னை சூழ் * புல்லாணி அம்மானை *
மின் இடையார் வேட்கை நோய் கூர * இருந்ததனை **
கல் நவிலும் திண்தோள் * கலியன் ஒலி வல்லார் *
மன்னவராய் மண்ணாண்டு * வானாடும் உன்னுவரே 10

**அடிவரவு:** காவார் முன்னம் வவ்வி பரிய வில் சுழன்று கனை தூம்புடை வேதம் பொன்னலரும் தவளம்

**திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்**

---